# EMBASSY OF JAPAN

No. 20, Srimath R.G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
TEL:94-11-269-3831~3, FAX: 94-11-2699074
Email: cultujpn@co.mofa.go.jp


## PRESS RELEASE

9, செப்டெம்பர் 2014

## மெடம் சிரந்தி மற்றும் மெடம் அகியே ஆகியோரால் "ஒளிரும் கிழமைகள் (WOMEN'S WEEKS)" ஆரம்பித்து வைப்பு




மான்புமிகு சின்சோ அபே அவர்களின் பாரியார் மெடம் அகியே அபே அவர்கள் இலங்கையின் முதற் பெண்மனி மெடம் சிரந்தி ராஜபக்ஷ உடனினைந்து "ஷைன் வீக்" (Shine Weeks) நிகழ்ச்சியை செப்டெம்பர் 7ம் திகதி ஆரம்பித்தார். ஜப்பான் செப்டெம்பர் 12ம் முதல் 14ம் திகதி வரை உலகளாவ ரீதியில் சிறந்த பெண் தலைவர்களை அழைத்து "டோக்கியோ உலக பெண்கள் பேரவை (WAW! Tokyo 2014)" என்ற தலையங்கத்தில் ஆய்வரங்கொன்றை நடாத்துகிறது. இச்சந்தர்ப்பதிற்காக செப்டெம்பர் 8ம் திகதி முதல் 19ம் திகதி வரையான காலப்பகுதியை ஜப்பான் "ஒளிரும் கிழமைகள்" (Shine Weeks) என பெயரிட்டுள்ளது. இக்காலப்பகுதியில் பல்வேறு பெண்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் உலகளாவ ரீதியில் நடாத்தப்படும்.

ஒளிரும் கிழமைகளின் ஆரம்ப நிகழச்சியாக "தேசத்தின் வெற்றியில் பெண்கள்" என்ற கண்காட்சியை இலங்கை நடாத்தியமைக்கு நான் நன்றியுடையவளாக இருக்கிறேன் என்று மெடம் அகியே கூறினார்.

இலங்கையும் ஜப்பானும் பெண்கள் வலுவூட்டலை மேம்படுத்துவதில் ஒத்துழைத்துச் செயற்பட முடியும். இலங்கையிலும் ஜப்பானிலும் பெண்கள் மேலும் செயற்திறனுள்ள பாத்திரங்களை வகிக்க முடியும் என நான் எதிர்ப்பார்க்கிறேன்.

“தேசத்தின் வெற்றியில் பெண்கள்” நாடளாவ ரீதியில் இலங்கை அரசாங்க உதவி பெற்ற பெண் முயற்சியாளர்களின் பல்வேறு உற்பத்திகளை காட்சிப்படுத்தியது. மேலும் இக் கண்காட்சி ஜப்பானிய அரசாங்கத்தால் ஆதரவளிக்கபபடும் வறுமை ஒழிப்புக்கான சிறு கடன் திட்டத்தினதும் “Poverty Alleviation Microfinance Project (PAMP II)” வேல்ட் விஷன் ஜப்பான், பார்சிக் (World Vision and PARCIC). ஆகிய 2 ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஆதரவளிக்கப்படும் பெண் முயற்சியாளர்களினதும் பல்வேறு உற்பத்திகளையும் காட்சிப்படுத்தியது.

இந்நிகழ்ச்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே ஆகியோருக்கிடையே அதே நாளில் கைச்சாத்திடப்பட்ட “கடல் சார் நாடுகளிக்கிடையே ஒரு புதிய பங்காண்மை (A New Partnership between Maritime Countries)” கூட்டறிக்கையில் உள்வாங்கப்பட்ட பெண்கள் வலுவூட்டலை மேம்படுத்துவதில் இரு நாட்டுத்தலைவர்களுக்கும் உள்ள பற்றுருதியை வெளிப்படுத்தியது.




(முடிவு)

***

Please contact the Cultural and Information Section of the Embassy for further information. Tel: 011-269-3831~3 (ext.248)